உ

சிவமயம்

## நம்பியாரூரரென்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப்பதிகங்கள்.

# ஏழாந் திருமுறை

## எனது உரை

அன்னை துர்க்காதேவியின் அருட்பெருங்கருணையினால் அகவை எண்பதைப் (80) பூர்த்தி செய்கின்ற திருவருள் வாய்ப்புப் பெற்றுள்ளேன். ஆண்டுதோறும் ஜனவரி ஏழாந்திகதி நடைபெறுகின்ற பிறந்தநாள் அறநிதிய விழா இம்முறை எமது சிந்தனைக்கும் செயலுக்கும் வலுவூட்டி நிற்கிறது.

சிறுபராயம் தொடக்கம் நான் கல்வி கற்ற பாடசாலைகளில் திருமுறைகள் நன்கு போதிக்கப்பட்டன. இதனால் எனது ஆர்வம் நாயன்மார்களிடத்திலும் மற்றும் திருமுறை ஆசிரியர்களிடத்திலும் பக்தி உணர்வை மேலோங்கச் செய்தது. இராமநாதன் கல்லூரியிலே ஆசிரியப்பயிற்சி பெற்ற பொற்காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை. சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் திருமுன்னிலையில் பல சந்தர்ப்பங்களில் திருமுறை பாடி நானும் மகிழ்ந்து கேட்போரையும் மகிழ வைத்துள்ளேன். கொக்குவில் குமாரசாமிப்புலவர் போன்ற அருளாளர்கள் என்னை இத்துறையில் நெறிப்படுத்தினர் என்பது வெளிப்படை.

படிக்கும் போதே பெரியபுராணத்திலும் சிறப்பாகத் தடுத்தாட்கொண்ட புராணத்திலும் சுந்தரமூர்த்திநாயனார் தேவாரங்களிலும் எனக்கு ஈடுபாடு அதிகம். அதனால் இன்றைக்கும் அவை மனப்பாடமாகவே இருக்கிறது. இந்த அருள் அனுபவத்தை முன்னிட்டு எனது முத்து விழாவில் (எண்பதாவது வயது) அறநிதியத்தின் பேரில் ஏழாந் திருமுறையைத் தனித்து ஒரு நூலாக்கி வெளியிட வேண்டுமென்று விரும்பினேன். எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானம் மனப்பூர்வமான சம்மதத்தை எனக்குத் தந்தது. நூறு பதிகங்களையும் பதினேழு பண்களையும் கொண்ட இத்திருமுறை தனித்துவமானது. இல்லறம், துறவறம், திருப்பணி, ஆலய வழிபாடு, தூயநட்புரிமை, தோழமைத் தொடர்பு ஆகியவற்றை நகைச்சுவையுடன் வெளிப்படுத்தியுள்ளார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். “பித்தா பிறைசூடி...” என்று முதற் பாடல் ஆரம்பித்து “ஊழிதோர் ஊழி முற்றும்” என்ற பூர்த்திப் பாடலோடு ஏழாந்திருமுறை நிறைவு பெறுகிறது. திருமுறைப் பிரியர்கள் எல்லோரும் இதனைப் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதே எனது வேணவா.

சைவமக்களுக்கு பக்திப்பிரவாகத்தைக் காணும் பொழுதும் எண்ணும் பொழுதும் கூட்டிநிற்கும் இடம் திருக்கைலாய மலையாகும். இங்கு நடந்த ஒரு நிகழ்வை முதலில் குறிப்பிடுகிறேன். ஆலாலசுந்தரர் என்பவர் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராகப் பணிபுரிந்தார். அங்கே உமையம்மையின் சேடியர்களாக அனிந்திதை, கமலினி என்ற இருபெண்கள் பணிபுரிந்து வந்தனர். சட்டென்று நடந்த சம்பவமாக ஆலாலசுந்தரர் அங்கு பணிபுரிந்த இருபெண்களையும் பார்த்துச் சிறிது ஆசைப்பட்டார். எண்ணங்களெல்லாம் இறைவனுக்கு வெளிச்சம் தானே. சட்டென்று கட்டளை பிறந்தது. "சுந்தரா நீ பூலோகத்திலே போய்ப் பிறக்க வேண்டும். இந்தப் பெண்களின் மேல் மையல் கொண்டமையினால் உனக்கு இந்தத் தண்டனை கிடைக்கிறது. அங்கே இந்தப் பெண்கள் பிறப்பார்கள். அவர்களைத் திருமணம் செய்து உனது ஆசையை நிறைவேற்றுவாயாக". அழுதார்; தொழுதார்; வணங்கினார்; "ஐயனே நான் மானிட மயக்கத்தில் இருக்கும் போது நீ என்னை வந்து தடுத்தாட்கொள்ள வேண்டும்" என்று இரங்கி வேண்டினார் சுந்தரர். இறைவனுடைய இசைவும் கிடைத்தது.

திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூர் என்ற பதியிலே அந்தண சிரேஷ்டரான சடையனாருக்கும் அவர்தம் வாழ்க்கைத்துணை இசைஞானி யாருக்கும் மகனாக அவதாரம் செய்தார். பெரியபுராணத்தைப் பார்ப்போம்.

**"மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்**
**வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனாருக்(கு)**
**ஏதமில் கற்பின் வாழ்க்கை மனைஇசைஞானி யார்பால்**
**தீதகன் றுலகம் உய்யத் திருஅவதாரம் செய்தார்."**

கைலயங்கிரிநாதன் கட்டளைப்படி கமலினி என்ற சேடிப்பெண் திருவாரூரிலும் அனிந்திதை என்ற சேடிப்பெண் திருவொற்றியூரிலும் அவதரித்து வளர்ந்து வந்தார்கள். ஆலாலசுந்தரருக்கு "நம்பியாரூரர்" என்ற நாமம் பெற்றோர் களால் சூட்டப்பட்டது. ஒருநாள் தெருவிலே தேர் உருட்டி விளையாடும் பொழுது அந்நாட்டு மன்னர் நரசிங்க முனையர் என்பவர் இப்பிள்ளையை வளர்ப்புப் பிள்ளையாக வளர்ப்பதற்குவிருப்பம் கொண்டு பெற்றுக்கொண்டார். திருமணப்பருவம் வரை அங்கு வளர்ந்து வந்தார். அரச செல்வமும், அந்தணச் செல்வமும் இவரிடத்திலே ஓங்கி நின்றது. உலக ஆசாரத்துக்கு ஏற்ப சடங்கவி சிவாச்சாரி யாருடைய திருமகளை மணம்பேசி அனைத்து ஆயத்தங்களும் நடைபெற்றது. அரச செல்வமும் அந்தணச் செல்வமும் மேலோங்கி நிற்க இறைவனுடைய திருவடிகளைத் தனது மனதிலே பதித்துக் கொண்டு மணப்பந்தலுக்கு எழுந்தருளினார் நம்பியாரூரர். ஆனால் இவர் திருமணம் புரிய வேண்டிய முற்பிறப்புத் தொடர்பு வேறெங்கோ இருந்தது. எனவே இறைவன் தடுத்து ஆட்கொள்வதற்காக முதிய அந்தணர் வேடத்தில் திருமணப்பந்தல் முன் எழுந்தருளி "அடிமை" என்ற மூல ஓலையைக் காட்டி தொண்டு செய்யவேண்டும் என்று வலியுறுத்தி வெற்றியும் கண்டார்.

பணிந்து கேட்டபொழுது "அவளைப் பிரியமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடு" என்பது ஆண்டவன் கட்டளை. ஆனால் இறைவனின் திருவிளையாட்டால் சத்தியம் செய்து கொடுத்ததை மீறினார். கண்கள் ஒளியிழந்தார். மீண்டும் மீண்டும் இறைவனையே பாடிப்பாடி காஞ்சியிலும் திருவாரூரிலும் கண்ணொளியை மீண்டும் பெற்றார் என்பது வரலாறு. பிழை பொறுத்தருளும் பெற்றி வாய்ந்த எம்பெருமானைத் தோழமையாகக் கொண்ட சுந்தரர் வியந்து மேலும் மேலும் பாடுகின்றார்.

**"...........அடியேற் கெளிவந்த**
**தூதனைத் தன்னைத் தோழமை யருளித்**
**தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்**
**நாதனை நள்ளாறனை அமுதை**
**நாயினேன் மறந்தென் நினைக்கேனே"**

என்பது தேவாரம். திருவாரூர்ப் பெருமானே அடியெடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டர்த் தொகையையும் பாடியருளினார் சுந்தரர். இதுவே பெரியபுராணம்தோன்றுவதற்கு முதல் நூலாக அமைந்தது. இதனைக் குறித்துச் சுந்தரருக்குப் பெரியபுராணத்தில் பல இடங்களில் நன்றி செலுத்துகிறார் சேக்கிழார். "தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே எம்பெருமான் தமர்கள் திருத்தொண்டேத்த லுறுகின்றேன்" என்றும் "ஈசனடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்து தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன் வாசமலர் மென்கழல் வணங்க வந்த பிறப்பை வழுத்துவாம்" என்றும் பாடியுள்ளார்.

வாழ்வாங்கு வாழ்வதற்கு அனைத்து வாய்ப்புகளையும் இறைவனே தந்தருள வேண்டும் என்று பாடும் திறன் சுவைமிக்கது. திருநாகைக்காரோணம் என்ற தலத்தில் எழுந்தருளிய பெருமானை பார்த்து "முத்தாரம் வேண்டும் மணிவைரம் வேண்டும் கஸ்தூரி கமழ்சாந்து வேண்டும்; பொற்பூவும் பட்டிகையும் ஆடையாபரணம் அனைத்தும் வேண்டும்; கறிவிரவு நெய்ச்சோறு மூன்று நேரமும் தரவேண்டும்" என்று தோழன் என்ற உரிமையோடு வேண்டி நிற்கிறார். ஆனால் இவற்றிலே முற்றாக மயங்கியவரல்லர். ஏழாந்திருமுறையில் அடிகளாருடைய கருத்து "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே." நயத்துக்குச் சுந்தரனார் என்பது இவர் பாடல்களில் பல இடங்களில் தொனிக்கிறது.

திருமுருகன் பூண்டியிலே சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் கள்வர்கள் பொருட்களை வழிமறித்துக் கவர்ந்து சென்றனர். குறை காண்கின்றார் சுந்தரர். "உமது எல்லையில் அடியார்க்குத் துன்பம் நேரிடலாமா? காக்குந் தெய்வம் நீயிருக்கக் கள்வர் தொல்லை நேரிட்டதேன்? எல்லைக் காப்பதொன்றில்லையாகில் நீர் எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானே" என்று கூறி நியாயங் கேட்கிறார்.

இவ்வாறு கவிதை நயம்பட ஏழாந்திருமுறையில் பல இடங்களில் எடுத்துக் காட்டுகிறார். அது மாத்திரமன்றி திரைத்து நரைத்து மூப்பு வரும் வரையும் காத்திராது இளமையிலேயே வழிபாட்டில் ஈடுபடவேண்டும் என்பது இளைஞர்களுக்கு நாயனார் காட்டும் அறிவுரையாகும். எனவே தம்பிரான் தோழன் என்ற உரிமையோடு மண்ணுலகில் பிறந்தவர்கள் அனுபவிக்க வேண்டிய சுகானுபவங்களையும் முடிவில் மானிடப்பிறப்பின் குறிக்கோளையும் திறம்பட எடுத்துக்காட்டி ஏழாந்திருமுறையை நிறைவு செய்கிறார். அந்த நிறைவிலேயே "தானெனை முன்படைத்தான்" என்ற பதிகம் பூர்த்தியாகின்றது. இவற்றையெல்லாம் படித்துப் பொருளுணர்ந்து எந்தமது வாழ்வுக்கு ஊதிபம் தேடிக் கொள்வோமாக.

எனது எண்பதாவது ஆண்டு அகவையை முன்னிட்ட வைபவத்தில் வெளியிடப்படும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பெருமாட்டி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அன்னாரின் அணிந்துரை படிப்போர் அனைவருக்கும் மெய்சிலிர்க்கப் பண்ணும் என்பதில் ஐயமில்லை. அடுத்து இந்நூலை வெளியிடுவதற்கு வாய்ப்பும் சம்மதமும் தெரிவித்த பிறந்தநாள் அறநிதியக் குழுவினருக்கும் நன்றிகூற வேண்டிய கடமை எனக்குண்டு. மேலும் இந்நூலை அழகுற அச்சிட்டு வெளியிட உதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும், அங்கு பணியாற்றுகின்ற பணியாளர் ஒவ்வொருவரினதும் அயராத ஒத்துழைப்புக்கும், சிறப்பாக நாளும் பொழுதும் தன் நேரத்தை ஒதுக்கி நூறு பதிகங்களையும் பலமுறை படித்து ஒப்புநோக்கி உதவிய அழுத்தக முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம் அவர்களுக்கும் நன்றி சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை. அன்னாரின் உதவி நூலுக்குப் பெருமை தந்தது. மூலப்பிரதியோடு ஒப்புநோக்கும் பணியில் தினமும் கண்ணியமாக ஈடுபட்டு இந்நூலை வெளியீடு செய்ய பேருதவி செய்த சைவத்திரு. கா. சிவபாலன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. எமது வேண்டுகோளை ஏற்று முகப்பு அட்டையை அழகுற வடிவமைத்துத் தந்த யுனி ஆட்ஸ் நிறுவனத்துக்கும் அதன் முதல்வர் திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் என்றென்றும் நன்றியுடையோம். மேலும் எல்லாவற்றையும் அருட்பொலிவோடு நிறைவேற்றி வரும் அன்னை துர்க்கையம்பாளுக்கும் எனது வணக்கத்தைப் பரிபூரணமாகச் செலுத்தி அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**

# சுந்தரத் தமிழ்

**வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்**
**வழங்கிய**

# அணிந்துரை

**"வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே**
**வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே**
**மங்கை பாகனை தூது நடத்துமே**
**மருவியாறு வழிவிட நிற்குமே**
**செங்கல் லானது தங்கம தாக்குமே**
**திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே**
**துங்க வான்பரி சேரற்கு நல்குமே**
**துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே"**

மாதொரு பாகனார்க்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலவிளக்காம் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும், தென்தமிழ் நாடு செய்த தவப்பயனாகத் தோன்றியவர் நம்பியாரூரர். திருக்கயிலையில் ஆலாலசுந்தரனாக ஆலமுண்ட கண்டனுக்கு அணுக்கத்தொண்டராகும் பேறுபெற்றவர். துவரைக்கிறையாகிய யாதவர் குலத் தலைவன் கண்ணபிரானின் திருமுடி மீது தனது திருவடி பதித்து சிவதீக்ஷை அளித்த உத்தமன் உபமன்னிய முனிவன். சம்புவின் திருவடியல்லாது பிறதெய்வத்தை உள்ளாத உயர்ந்தவன் உபமன்னிய முனிவன். பிள்ளைப் பருவத்தில் பால் பெறாது அழுது வருந்த, அவரைத் தந்தையாகிய புலிக்கால்முனிவர் கூத்தப்பெருமான் திருமுன்பு கிடத்தலும், கூத்தப்பெருமான் அவருக்கு பாற்கடலையே அழைத்து அருளினான் என்று கோயிற் புராணம் கூறும். அத்தகு சிறப்பு நலம் பொருந்திய பெருந்தவமுனிவர் நம்பியாரூரரை வணங்கி மகிழும் நியமமிக்கவர் என்று கூறும்பொழுது சுந்தரரின் பெருமை அங்கை நெல்லியெனத் தெளிவாகும்.

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருத்தொண்டர் திருவந்தாதியில் உள்ள மொத்தப் பாடல்கள் எண்பத்தாறாகும். அறுபத்து மூன்று தனியடியார்கள் ஒன்பது தொகையடியார்களுடன் அடியார்களின் தொகை எழுபத்திரண்டாகும். திருவந்தாதியில் மெய்யடியார்கள் எழுபத்திருவருக்கும் ஒவ்வொரு திருப்பாடலை அமைத்து சம்பந்தர், கழறிற்றறிவார், கோச்செங்கட்சோழர், திருநாவுக்கரசர் ஆகிய நால்வர்க்கும் ஒவ்வொரு பாடல்கள் கூடுதலாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் சிறப்பு நோக்கி பத்து பாடல்களை அதிகமாகவும் அமைத்திருக்கின்றார் திருநாரையூர்பிள்ளை சேக்கிழார் பெருமானும் திருத்தொண்டர் புராணத்தின் ஒவ்வொரு சருக்கத்தின் நிறைவிலும் சுந்தரருக்குப் பாடல்

அமைத்து சிந்தை மகிழ்ந்திருக்கின்றார் என்றால் இது மற்றைய நாயன்மார்களுக்குக் கிடைக்காத தனித்த பெருமை. மேலும் "கற்பனைக் களஞ்சியம்" என்று புலவர்களால் போற்றப்பெறும் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தனது நால்வர் நான்மணிமாலையில், ஆளுடைபிள்ளை, ஆளுடை அரசு இவர்கள் நிகழ்த்திய அற்புதங்களான என்பைப் பெண்ணுருவாக்கியமை, கல்லை மிதக்கச் செய்தமை என்ற இவற்றைவிட முதலை உண்ட பாலகனை மீட்ட ஆளுடைநம்பியின் செயலே மிகமிக அற்புதமானது என்று பட்டிமன்றம் ஒன்றையே நடாத்தி நடுவர் தீர்ப்பும் வழங்கி விடுகின்றார் பாடல் இதோ......

**"போத முண்ட பிள்ளை என்பு**
**பொருகண் மாது செய்ததோ**
**காதல் கொண்டு சொல்லின் மன்னர்**
**கன்மிதப்ப வுய்த்ததோ**
**வாய்திறந்து முதலை கக்க**
**மகனை நீய ழைத்ததோ**
**யாது நம்பி யரிது நன்றெ**
**னக்கி யம்ப வேண்டுமே"**

பூம்பாவை என்னும் பெண்ணை உயிர்ப்பிக்க அவளது எலும்பு ஆதாரமாக இருந்தது. கல்லையே தெப்பமாக்கி மிதந்தமைக்கு கல் ஆதாரமாக இருந்தது. ஆனால் முதலை விழுங்கிய பாலகனை அழைக்கும் பொழுது - பாலகனும் இல்லை - முதலையும் இல்லை - முதலை இருந்த நீரும் இல்லை - நீர் இருந்த சுனையும் வற்றி வெடித்துவிட்டது. இந்நிலையில் சுனையை உண்டாக்கி, சுனையில் நீரை வரச்செய்து, நீரிலே முதலையை அழைத்து, முதலையின் வயிற்றில் பாலகனைத் தோற்றி பாலகனுக்குக் கடந்த ஏழு ஆண்டுகளின் வளர்ச்சியையும் தந்து யாதொரு பற்றுக்கோடும் இல்லாமல், முதலையின் வாயிலிருந்து பாலகனை மீட்ட ஆளுடை நம்பியின் செயலே அரிய செயல் என்று முத்தாய்ப்பு இடுகின்றார் சிவப்பிரகாசர். கச்சியப்ப சிவாச்சாரியார் தனது கந்தபுராணக் கடவுள் வாழ்த்தில்

**"வறந்திடு பொய்கை முன்னிரம்ப மற்றவ**
**னுறைந்திடு முதலை வந்துதிப்ப வன்னதா**
**லிறந்திடு மகன் வளர்ந் தெய்தப் பாடலொன்**
**றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்."**

என்று போற்றித் துதிக்கின்றார். திருக்களிற்றுப் படியார் ஆசிரியரும் 'தென்புகலிவேந்தன் செயல்' 'திருவாமூராளி செயல்' என்று கூறிவிட்டு 'வன்தொண்டன் தொண்டுதனை யாதாகச் சொல்லுவேன் யான்' எனத் திகைத்து நிற்கின்றார் என்றால் "சுந்தரத் தமிழின்" பெருமையை எப்படி அளவிடுவது?

ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகள் அறிவியலுக்கும், சோவியத் மொழிகள் ஏகேசுவர வாதத்திற்கும், இலத்தீன் மொழி சட்டத்திற்கும், வடமொழி மெய்யுணர்விற்கும் ஏற்றமுடையதாய்த் திகழ்வதைப் போலத் தமிழ்மொழி பக்தியுணர்வைப்

பெருக்கப் பயன்படுகிறது என்பது பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் கருத்து. அ∴து உண்மையே. திருமுறைகள் அனைத்துமே தமிழ்த்தேறல் - பக்தியின் பிழிவு. பக்தியின் முதல்நிலை படமாடும் கோயில் பகவனை வழிபடுதல் என்றால் பக்தியின் நிறைநிலை நடமாடும் கோயில் நம்பரை வழிபடுதல். ஆம்...... சிவனடியார்களையே தனது வாழ்வின் முதலாகக் கொண்டு, தொண்டர்க்குத் தொண்டனாகி திருத்தொண்டத் தொகை அளித்த திருவாளன் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவர் தன்னை அடியார்க்கு அடியன் என்று அழைத்து இறும்பூதெய்துகின்றார். திருஆலங்காட்டுப் பதிகத்தில்

**"அத்தா! ஆலங்காடா உன்**
**னடியார்க் கடியேன் ஆவேனே!"**

**"ஐயா ஆலங் காடா உன்**
**னடியார்க் கடியேன் ஆவேனே"**

**"ஆண்டா ஆலங்காடா"**
**"அறிவே ஆலங்காடா"**
**"பழையனூர் ஆலங்காடா"**
**"அண்ணா ஆலங்காடா"**
**"அண்டா ஆலங்காடா"**
**"அம்மா ஆலங்காடா"**

என்று பலப்பல சொல்லி இறைவனை அழைத்து அவனது அடியார்க்கு அடியனாகும் ஆர்வத்தைத் தெரிவிக்கின்றார். திருமழபாடி திருப்பாடலுள்

**"பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட் கெல்லாம்**
**தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்"**
என்றும்,

திருக்கச்சி மேற்றளி பாடலுள்

**"ஆள்தான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டு"**

என்றும் கூறுவது அவரது மனநிலையை விளக்கும் வண்ணம் உள்ளது.

**"செம்மலர் நோன்தாள் சேரலொட்டா**
**அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே"**

என்ற சிவஞான போதம் பன்னிரண்டாம் சூத்திரம் அடியவர்களில் ஆண்டவனைக் காணும் சீவன் முக்தராகிய சுந்தரருக்காகவே எழுதப்பட்டதோ........

எளிமையில் எளிமையாகத் தோற்றும் நம்பியே அரிதிலும் அரிதாகத் தோற்றுகிறார். ஆம்....... முழுமுதற் பொருளாகிய சிவபெருமான் சுந்தரனைத் தோழனாகக் கொள்ளவில்லை... தன்னைத் தோழனாகத் தந்து ஏற்றம் தருகின்றார்.

**"தோழமை யாக வுனக்கு நம்மைத்**
**தந்தனம் நாமுன்பு தொண்டுகொண்ட**
**வேள்வியி னின்றுநீ கொண்ட கோல**
**மென்றும் புனைந்துநின் வேட்கைதீர**
**வாழி மண்மேல்விளை யாடுவா யென்று"**

அருள் புரிகின்ற திறப்பாடு வேறுயாருக்கும் கிட்டவில்லை. இதனை அகச்சான்றாக திருநள்ளாற்றுப் பதிகத்துள்

**"தன்னைத் தோழமை யருளித் தொண்டனேன் செய்த**
**துரிசுகள் பொறுக்கும் நாதனை"**

என்றும்,

திருவாரூர்ப் பதிகத்துள்

**"ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய**
**தோழனுமாய் யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி"**

என்ற வரிகளைக் காணலாம்.

தோழமை உரிமைபற்றி இறைவனையேவித் தொண்டு கொண்ட பரவை கேள்வனின் சதுரப்பாடு வியக்கத்தக்கது. குண்டையூரில் பெற்ற நெல்மலையை ஆருக்கு எடுத்துவர ஆள் வேண்டியதற்கான சான்றுகள் திருக்கோளிலி பதிகத்தில் காணப்படுகின்றன.

**"கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்**
**ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே"**

**"பரவை பசிவருத்தம் அதுநீயும் அறிதியன்றே"**
**"நெல்லிட ஆட்கள் வேண்டி நினைந்தேத்திய பத்தும் வல்லார்"**

திருமுதுகுன்றத்திலே பெற்ற பன்னீராயிரம் பொன்னைச் சுந்தரர் மணிமுத்தாற்றில் இட்டு திருவாரூர் கமலாலயத்தில் பரவை நாச்சியாருக்கு முன்னிலையில் கொண்டுவந்து தரவேண்டும் என்று வேண்டிப் பெற்ற குறிப்பு திருமுதுகுன்றப் பாடல்களில் காணப்படுகின்றன. குமரகுருபரர் மதுரைக் கலம்பகத்தில்

**"கொங்குரை யாற்றிலிட்டுக் குளத்தினிற் றேட நீடு**
**மங்குறோய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாணா**
**எங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடை தேர்திமற்றம்**
**மங்கையர் மனம்போ லன்றே மகிழ்நர் தம் வாழ்க்கைதானே"**

பரத்தையர் மனையில் தலைவனை விட்டுவிட்டு தம்மனையில் தேடும் பாணனைப் பார்த்து, ஆற்றிலிட்டுக் குளத்திலே தேடுகிறாயே அறிவற்றவனே! என்று எள்ளி நகையாடும் தலைமகளைக் காண்கிறோம்.

நட்பின் உரிமைபற்றி ஊடியும் உறுத்தும் இறைவனை முனிந்து கூறும் இடங்களை ஆரூரர் பாடல்களில் தான் அதிகமாகக் காணலாம். திருஓணகாந்தன்

தளியுள் சென்று பொன் வேண்டும் பொழுது சிவபெருமானது குடும்பமே சிறப்பானதல்ல என்று இகழ்வது போலப் பேசுகின்றார். சிவபெருமானே! உமது பக்கத்தில் வீற்றிருக்கும் உமைக்கு அஞ்சி சடையின் மேலுள்ள கங்காதேவி வாயே திறக்கமாட்டாள். உமது மூத்த மகனுக்கு வயிறே பிரதானம் வேறெதையும் அறியமாட்டான். இளைய பிள்ளையோ விளையாட்டுப்பிள்ளை - உமது தேவியாகிய உமையைப்பற்றிச் சொல்லவே வேண்டாம் உமது சொல்லிற்கெல்லாம் 'ஆமாம்' போடுகிறவள். (யாழ்ப்பாண வழக்கில் ஓமோம்) நீரோ அடியவர் குறைபோக்கி யாதும் செய்யீர். ஆதலால், உதவாத உமது குடும்பத்திற்கு நாங்கள் பணி செய்ய மாட்டோம் என்று கொடிபிடித்து வேலை நிறுத்தம் செய்கிறார். உலகில் முதன் முதலாக வேலைநிறுத்தத்திற்கு வித்திட்டவரே சுந்தரர் தானோ?....

**"திங்கள் தங்கு சடைகண் மேலோர் திரைகள் வந்து புரளவீசும்**
**கங்கை யாளேல் வாய்தி றவ்வாள் கணபதியேல் வயிறு தாரி**
**அங்கை வேலோன் குமரன் பிள்ளை தேவி யார்கோற்றட்டி யாளார்**
**உங்களுக்காட் செய்ய மாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே"**

மற்றொரு பாடலில்

"மதியு டையவர் செய்கை செய்யீர்" என்று அஞ்சாமல் கூறுகின்றார். அதுபோல திருவொற்றியூரில் சங்கிலியிடம் செய்த சபதம் பிழைத்தமைக்காக நீதியே வடிவான இறைவன் சுந்தரரின் இருகண்களையும் ஒளியிழக்கச் செய்தார். அச்சமயத்தில் அவர் பாடும் பாடல்களில் கோபமும் தன்னிரக்கமும் சுவை சேர்க்கின்றன.

**"மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்**
**மைந்தனே மணியேமண வாளா**
**அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்**
**அழையல் போகுருடாஎனத் தரியேன்**
**முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்**
**முக்கணா முறையோ"**

என்று முறையிடும் பொழுதிலேயே உனக்கு மூன்று கண்கள் இருக்க எனது கண்கள் இரண்டையும் பறித்து விட்டாயே என சினக்குறிப்பில் நயக்குறிப்பையும் சேர்த்திழைக்கும் சதுரப்பாடு சுந்தரத் தமிழை சுவைக்க வைக்கின்றது. பிறிதோரிடத்தில்

**"சுழித்த லைப்பட்ட நீரதுபோலச் சுழல்கின்றேன் சுழல்கின்ற தென்னுள்ளம்**
**கழித்த லைப்பட்ட நாயது போல ஒருவன் கோல்பற்றிக் கறகற விழுக்கை**
**ஒழித்து நீஅரு ளாயின செய்யாய்"**

என்று கதறும் பகுதிகள் கண்ணீரை வருவிப்பன.

கண் ஒளி இழந்த சுந்தரர் திருவெண்பாக்கத்திறைவரிடம் சென்று "நான் படும் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு நீ கோவிலில் தான் இருக்கிறாயா" என்று கேட்க இறைவனும் "உளோம் போகீர்" என்று ஊன்றி நடக்க ஊன்றுகோலை உதவினான்.

திருக்குருகாவூரில் இறைவன் பொதிசோறு அளித்தமை - உடற்பிணி நீங்கியமை - ஊன்றுகோல் பெற்றமை - பரவையின் ஊடலை நீக்கப் பரமனைத் தூது போக்கியமை - திருமுருகன் பூண்டியில் வழிப்பறி செய்யப்பெற்ற பொருள்களை வேண்டிப் பெற்றமை - முதலை உண்ட பாலகனை மீட்டமை - திருவஞ்சைக் களத்தில் தனது வாகனமாகிய ஐராவதத்தை அனுப்பி இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் எதிர்கொள்ள திருக்கயிலைக்கு சிவபெருமான் அழைப்பித்தமை - திருநொடித்தான் மலைப் பதிகத்தை வருணதேவனிடம் அளிக்க அவன் அஞ்சைக்களத்தில் சேர்ப்பித்தமை என எல்லா அற்புதங்களும் அழியா அகச் சான்றுகளுடன் விளங்குவது சுந்தரத் தமிழின் உச்சச் சிறப்பு.

"பித்தா" எனத்தொடங்கி "ஊழிதோறூழிமுற்றும்" என்பது வரை முப்பத்தெண்ணாயிரம் பாடல்கள், ஆரூரரின் அருந்தமிழ்ப் பாடல்கள் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. ஆனால் காலக்கறையான் தின்றது போக கிடைத்திருக்கும் பாடல்கள் ஆயிரத்து இருபத்தாறு மட்டுமே. சைவ உலகிற்கு எத்தகைய பேரிழப்பு......... எண்ணிப்பாருங்கள்.

ஆளுடை நம்பியின் பாடல்களில் இயற்கையோடு இயைந்த கற்பனை வளம் - செய்யுள் நலம் - சொல்லாட்சி - இலக்கிய நயம் - நகைச்சுவை பூரிப்பு இவைகளெல்லாம் தொடத் தொடச் சுரக்கும் மணற்கேணி ஊற்றுக்கள். காலத்தால் அழியாத ஜீவகாவியங்கள்.

இத்தகைய அற்புதத் திருமுறையை மக்கள் பயிலவேண்டும். மனத்துள் பதித்துக் கொள்ள வேண்டும். சுந்தரத் தமிழின் தெய்வீக மணத்தை நுகரவேண்டும். பொய்மையாளரைப் பாடிப் பொழுதைக் கழிக்காது பிறைசூடிய புனிதனின் பொற்கழல்களைப் போற்றி பிறவிப் பயனைப் பெறவேண்டும் என்ற தலையாய தாய்மைக் கருணையுடன் சிவத்தமிழ்ச் செல்வி, கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது எண்பதாவது பிறந்த நாளில் சைவ உலகிற்கு ஒப்பரிய பரிசு ஒன்றினை அருட்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். அது தான் சுந்தரர் திருப்பாடல்கள் அடங்கிய ஏழாந்திருமுறை. அனைவரது அகத்திலும் பதிக்கப்பட வேண்டிய அற்புதத் தெய்வத்திருமுறை.

நூறு பதிகங்கள் அடங்கிய இத்திருமுறையின் எழில்நலம் கெடாமல், சீர் தளைகளை சிதைக்காமல், மூலத்தின் பண்பு கெடாமல் ஆக்கியிருப்பது சிறப்பு.

அன்னை மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணிபுரிய கொற்றவைத் தாயின் கோமள மலர்ப்பாதங்களைப் பணிவோம்.

**"தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்**
**வாச மலர்மென் கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்"**

வணக்கம்

**- வசந்தா வைத்தியநாதன்**

நம்பியாரூரரென்னும்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

# பதிக அட்டவணை

(ஏழாந் திருமுறை)


| பதிகப்பெயர் | பக்கம் |
|---|---|
| **பண்-இந்தளம்** | |
| திருவெண்ணெய்நல்லூர்ப்பதிகம் | 1 |
| திருக்கோத்திட்டையும் திருக்கோவலூரும் | 2 |
| திருநெல்வாயில்திருஅரத்துறை | 4 |
| திருஅஞ்சைக்களம் | 6 |
| திருஓணகாந்தன்றளி | 7 |
| திருவெண்காடு | 9 |
| திருஎதிர்கொள்பாடி | 10 |
| திருவாரூர் | 12 |
| திருஅரிசிற்கரைப்புத்தூர் | 14 |
| திருக்கச்சியனேகதங்காவதம் | 16 |
| திருப்பூவணம் | 17 |
| திருநாட்டுத்தொகை | 18 |
| **பண்-தக்கராகம்** | |
| திருத்துறையூர் | 20 |
| திருப்பாச்சிலாச்சிராமம் | 22 |
| திருநாட்டியத்தான்குடி | 24 |
| திருக்கலையநல்லூர் | 25 |
| **பண்-நட்டராகம்** | |
| திருவெண்ணெய்நல்லூருந்திருநாவலூரும் | 29 |
| மூப்பதுமில்லை | 30 |
| திருநின்றியூர் | 32 |
| திருக்கோளிலி | 34 |
| திருவேகம்பந்திருமேற்றளி | 35 |
| திருப்பழமண்ணிப்படிக்கரை | 37 |
| திருக்கழிப்பாலை | 38 |
| திருமழபாடி | 40 |

| பதிகப்பெயர் | பக்கம் |
|---|---|
| **பண்-நட்டராகம்** | |
| திருமுதுகுன்றம் | 42 |
| திருக்காளத்தி | 44 |
| திருக்கற்குடி | 45 |
| திருக்கடவூர் | 47 |
| திருக்குருகாவூர் | 49 |
| திருக்கருப்பறியலூர் | 50 |
| **பண்-கொல்லி** | |
| திருஇடையாற்றுத்தொகை | 52 |
| திருக்கோடிக்குழகர் | 54 |
| நமக்கடிகளாகிய - அடிகள் | 55 |
| திருப்புகலூர் | 57 |
| திருப்புறம்பியம் | 59 |
| திருப்பைஞ்ஞீலி | 60 |
| திருவாரூர் | 62 |
| **பண்-கொல்லிக்கௌவாணம்** | |
| திருவதிகைத்திருவீரட்டானம் | 64 |
| திருத்தொண்டத்தொகை | 66 |
| திருக்கானாட்டுமுள்ளூர் | 69 |
| திருக்கச்சூர்ஆலக்கோயில் | 72 |
| திருவெஞ்சமாக்கூடல் | 75 |
| திருமுதுகுன்றம் | 78 |
| முடிப்பதுகங்கை | 79 |
| திருஆமாத்தூர் | 81 |
| திருநாகைக்காரோணம் | 82 |

**பண்-பழம்பஞ்சுரம்**

ஊர்த்தொகை 85
திருப்பாண்டிக்கொடுமுடி 87
திருமுருகன்பூண்டி 88
திருப்புனவாயில் 90
திருவாரூர் 91
திருவாலங்காடு 93
திருக்கடவூர்மயானம் 94

**பண்-தக்கேசி**

திருவொற்றியூர் 96
திருப்புன்கூர் 98
திருநீடூர் 101
திருவாழ்கொளிபுத்தூர் 103
திருக்கழுமலம் 105
திருவாரூர் 107
திருவிடைமருது 109
திருவேகம்பம் 110
திருகோலக்கா 112
நம்பியென்றதிருப்பதிகம் 114
திருத்தினைநகர் 115
திருநின்றியூர் 117
திருவாவடுதுறை 118
திருவலிவலம் 119
திருநள்ளாறு 120
திருவடமுல்லைவாயில் 122
திருவாவடுதுறை 123

**பண்-காந்தாரம்**

திருமறைக்காடு 125
திருவலம்புரம் 126
திருவாரூர் 128
திருத்துருத்தியும்திருவேள்விக்குடியும் 129
திருவானைக்கா 132

**பண்-பியந்தைக்காந்தாரம்**

திருவாஞ்சியம் 133

**பண்-காந்தாரபஞ்சமம்**

திருவையாறு 135

**பண்-நட்டபாடை**

திருக்கேதாரம் 136
சீபர்ப்பதம் 138
திருக்கேதீச்சரம் 139
திருக்கழுக்குன்றம் 141
திருச்சுழியல் 142

**பண்-புறநீர்மை**

திருவாரூர் 144
திருக்கானப்பேர் 145
திருக்கூடலையாற்றூர் 148

**பண்-சீகாமரம்**

திருவன்பார்த்தான்பனங்காட்டூர் 149
திருப்பனையூர் 151
திருவீழிமிழலை 152
திருவெண்பாக்கம் 154

**பண்-குறிஞ்சி**

கோயில் 155
திருஒற்றியூர் 157
திருப்புக்கொளியூர்அவிநாசி 158
திருநறையூர்ச்சித்தீச்சரம் 160

**பண்-கவுசிகம்**

திருச்சோற்றுத்துறை 161

**பண்-செந்துருத்தி**

திருவாரூர் 163

**பண்-பஞ்சமம்**

திருவாரூர்ப்பரவையுண்மண்டளி 164
திருநனிபள்ளி 166
திருநன்னிலத்துப்பெருங்கோயில் 167
திருநாகேச்சரம் 169
திருநொடித்தான்மலை 170


**பதிகம் - 100**

**பண் - 17**

